**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2018**

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும்) இடையில் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச அபிவிருத்திச்சங்கத்தின் கடன்கள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைகளின் 4.09(பீ) பிரிவு மற்றும்2016 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 5768-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

முன்னாள் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, மற்றும் ஊவா மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்கொண்டு செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகவுள்ளது. மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,048 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42 மில்லியனாக உள்ளதுடன் முழுத்தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 செப்தெம்பர் 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும்

எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிசார் செயலாற்றல்

### 2.1. செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், மேலதிக நிதியளிப்பதற்கான செயற்திட்டத்தன் நடவடிக்கைகள் அதிகமாக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பொருளாதாரத்தை தாபிப்பதற்கு பிரதான முன்னோடியாக இருப்பதுடன் காலநிலை உட்கட்டமைப்பின் முன"னெற்றம் மற்றும் ஆதார சேவைகள் போன்ற 2 கூறுகளை கொண்டுள்ளது. செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கல் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 வரை நீர்ப்பாசனத் திணைக்களத்தால் 68 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 28 ஒப்பந்த பொதிகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 17 ஒப்பந்த பொதிகளின் கீழான வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவா கணிசமானளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் ஏனைய 11 ஒப்பந்த பொதிகளின் பௌதீக முன்னேற்றம் 20 சதவீதம் முதல் 85 சதவீதமான வீச்சில் இருந்தது. | செயற்திட்ட இலக்குகள் அடைவதற்கு இயலக்கூடியவாறு இருக்கவில்லை | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் செயற்திட்டங்களின் பிரயோகங்கள் மீதான நலிவுகளை தவர்ப்பதற்கு இயலக்கூடியவாறு தாமதங்களிற்காக காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |
| (ஆ) | இலங்கை மகாவலி அதிகார சபையால் வழங்கப்பட்ட 17 ஒப்பந்த பொதிகளில் 15 ஒப்பந்த பொதிகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது என் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் 06 ஒப்பந்த பொதிகளின் பௌதீக முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 80 சதவீதமான வீச்சில் இருந்தது என அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | ஊவா மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை 17 ஒப்பந்த பொதிகளை வழங்கியிருந்தது அதில் மீளாய்வாண்டு இறுதியில் 04 ஒப்பந்த பொதிகளின் பௌதீக முன்னேற்றம் 55 சதவீதம் முதல் 87 சதவீதமான வீச்சில் இருந்தது என அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |

## 2.2. வேலைத்தளங்கள் மீது செய்யப்பட்ட அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | புவிச்சரித்திரவியல் மற்றும் சுரங்க பணியகத்தால் வழங்கப்பட்ட மண் அகழ்தல் மற்றும் கிரவல் பரப்புதல் என்பவற்றிற்கான அனுமதிப்பத்திரம் முருத்துவெல வேலைத்தில் 2019 யூன் மாதத்தில் செய்யப்பட்ட களப் பரிசோதனையின் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | மண் அகழ்தல் வேலைகள் சட்டவிரோதமாக மேற்கொள்ளபட வேண்டியதுடன் அகழப்பட்ட பொருட்களை தவறாக பயன்படுத்தும் சாத்தியம். | பெருத்தமான பொருட்களை வழங்குவதற்கும் இருக்கின்ற பிரமாணங்களை பின்பற்றுவதற்கும் ஒப்பந்தகாரர் பொறுப்புடையவராகும். | பிரமாணங்களை கடைப்பிடிப்பதற்கு ஒப்பந்தகாரர் அறிவுறுத்த வேண்டிய தேவை. |
| (ஆ) | நிதியகம வேலைத்தளத்தில் 386 கனமீற்றர் மண்ணின் அளவு அவற்றின் மீதான ஆய்வு அறிக்கை பெறாமல் வழங்கலிற்காக செயற்திட்டத்தால் ரூபா 1.09 மில்லியன் செலவழிக்கப் பட்டிருந்தது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிதியகமவில் விவசாய பாதைகள் மற்றும் கால்வாய் கரைகளிற்கு மீளமைப்பதற்கு 7,562 கனமீற்றர் கிரவல் வழங்குதலிற்காக கொடுப்பனவு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 911 கனமீற்றர் கிரவல் இடப்படுதற்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் கணக்காய்விற்கு கிடைத்திருந்ததுடன் இதன் விளைவால் வழங்கப்பட்ட கிரவலின் உள்ளபடியான அளவு கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது. | (i) முறைப்படி தரக்காப்பீட்டு நடைமுறை பின்பற்றப்படவில்லை<br>(ii) மோசடியான கொடுப்னவிற்கான சாத்தியம் | அளவீடு மற்றும் ஒப்பந்த கொடுப்பனவு பிரகாரம், முறைப்படி தரக்காப்பீட்டு நடைமுறை பின்பற்றப்படவிலை. நியம அளவீட்டு நடைமுறையின் பிரகாரம் அளவீட்டுக்கு எடுத்த பின்னர் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். மேலும், கிரவல் மட்டப்படுத்தலிற்கான பரிசோதனை வேலைகள் பூர்த்தியான பின்னர் செய்யப்படுகின்றன. | தரக்காப்பீட்டு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு நடைமுறையில் வலுவான கட்டுப்பாடு பியோகிக்க வேண்டிய தேவை |

## 2.3. குறைவாகபயன்படுத்திய வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| ரூபா 6,048 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியனான மொத்த ஒதுக்கீடுகளில் 33.38 சதவீதத்தை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடுகளின் 27 மாதங்கள் கடந்த பின்னர் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,262 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 14.02 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | இருக்கின்ற மிகுதி 18 மாத காலப்பகுதியின் போது 66.62 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,786 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 27.98 மில்லியன் பயன்படுத்தல் சாத்தியத் தன்மை நலுவாகவுள்ளன. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிறைவெற்றுவதற்கு அதன் அமுலாக்கல் முகவரடகளுடன் இணைந்து செயற்பட செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருருந்தது. | செயற்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை. |

## 2.4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| செயற்திட்டமானது உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை சேர்த்திருக்கவில்லை பதிலாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் செயற்திட்ட பணிப்பாளரல் நியமிக்கப்பட்ட பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்களத்தின் கணக்காளர், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் முன்னாள் நீர்ப் பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின் 03 சிரேஸ்ட கணக்காய்வு உத்தியோகத்தர்கள் என்போரை கொண்டுள்ள செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வு குழுவால் அமுலாக்கப்பட்டன. செயற்திட்ட நடவடிக்கைகள் மீது பிரச்சனைகளை கண்டுபிடிக்க இயலக்கூடியவாறு விரிவான புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளில் முறையான உள்ளக கட்டுப்பாட்டு தாபிப்பை பாதிக்கும் | செயற்திட்டம் இறுதிக் கட்டத்தில் இருந்தமையால் புதிய செயற்திட்டங்களை அமுலாக்கும் நெரத்தில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றுவதற்கு கவனத்திற்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான அமுலாக்கப்பட்ட மீளாய்வை மேற்கொள்வதற்கு இயலக்கூடியவாறு செயற்திட்டம் இருக்கவில்லை. |